SURESH' IAS ACADEMY




# 31.08.2026 செய்திகள்

## இந்தியா – உஸ்பெகிஸ்தான்

» முக்கிய ஒப்பந்தங்கள்

- நம் நாட்டுக்கு நீண்ட கால அளவில் யுரேனியம் வினியோகிக்க ஒப்பந்தம்
- இந்திய கலாச்சார அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய ஆவண காப்பகம் மற்றும் உஸ்பெகிஸ்தான் நீதி அமைச்சகத்தின் கீழ் இயங்கும், 'உஸ் ஆர்க்கைவ்' முகமை இடையே ஆவண காப்பக பணிகளில் ஒத்துழைக்க ஒப்பந்தம்.
- ஆயுர்வேதம் மற்றும் பிற பாரம்பரிய மருத்துவ முறைகளில் ஒத்துழைப்பு மேற்கொள்ள ஒப்பந்தம்
- புவியியல் மற்றும் கனிமவளங்களை துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த ஒப்பந்தம்
- பொருளாதார மற்றும் நிதி உரையாடலை மேற்கொள்ள ஒப்பந்தம்
- சுற்றுச்சூழல் பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பு மேற்கொள்ள ஒப்பந்தம்
- உயர் கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சி துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்த ஒப்பந்தம்
- கூட்டாண்மை உறவுகளை நிறுவுவதற்காக, நம் நாட்டின் குஜராத்துக்கும், உஸ்பெகிஸ்தானின் சமர்கண்ட் மாகாணத்துக்கும் இடையே ஒப்பந்தம்.

» அறிவிப்புகள்

- இந்தியா – உஸ்பெகிஸ்தான் கூட்டணியை, விரிவான உத்திசார் கூட்டணியாக தரம் உயர்த்துதல்
- ஆரல் கடல் பகுதியில் காடு வளர்ப்பு பணிகளுக்காக 9.50 கோடி ரூபாய் நிதியுதவி வழங்குதல்.
- தாஷ்கண்ட் மாநில ஓரியன்டல் ஆய்வுகள் பல்கலையில், சமஸ்கிருத இருக்கை அமைத்தல்
- நம் நாட்டின் யு.பி.ஐ., சேவை உஸ்பெகிஸ்தானிலும் அறிமுகமாகிறது.

SURESH'

## சிறைக்கு வெளியே சென்று வேலை செய்ய அனுமதி

- ஜார்க்கண்டில் கைதிகள் சிறைக்கு வெளியே சென்று வேலை செய்ய அம்மாநில அரசு அனுமதி வழங்கி உள்ளது.
- அதே நேரம் அவர்கள் மாலை 6 மணிக்குள் சிறைக்கு திரும்ப பேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.
- ராஞ்சியில் உள்ள பிர்சா முண்டா மத்திய சிறை, ஹசாரி பாகில் உள்ள ஜெய் பிரகாஷ் நாராயண் மத்திய சிறை, கிழக்கு சிங்பூமில் உள்ள கசிடிஹ் மத்திய சிறை மற்றும் தும்பா மத்திய சிறை ஆகிய 4 மத்திய சிறைகளில் உள்ள திறந்த மற்றும் பகுதியளவு திறந்த முகாம்கள் மூலம் இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
- ஆனால் இத்திட்டம் அனைத்து கைதிகளுக்குமானதல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட சில கைதிகளுக்கு மட்டுமே இந்தச் சலுகை வழங்கப்படும்.
- திறந்த அல்லது பகுதியளவு திறந்த கைதிகள் தங்கும் அறை அமைப்பின் கீழ், கைதிகள் காலை 6 அல்லது 7 மணியளவில் வெளியே சென்று வேலை செய்து, தங்கள் குடும்பங்களுக்காகச் சம்பாதித்து, சுமார் 12 மணி நேரத்துக்குப் பிறகு சிறைக்குத் திரும்ப அனுமதிக்கப்படுவார்கள்.
- இந்த வசதி நகர்ப்புற மையங்களில் இருப்பதால், கைதிகளுக்கு வாழ்வாதாரம் ஈட்ட நியாயமான வாய்ப்பு கிடைக்கும்.

## சக்திவாய்ந்த தொலைநோக்கி விண்வெளிக்கு அனுப்பியது நாசா

- விண்வெளியில் இருந்து பிரபஞ்சத்தின் மறைந்திருக்கும் பகுதிகளை மிகப் பரந்த அளவில் ஆய்வு செய்யும் வகையில் விண்வெளி தொலைநோக்கி ஒன்றை நாசா உருவாக்கியுள்ளது.
- ரோமன் தொலைநோக்கியின் ஆய்வு பரப்பு, 36 ஆண்டுகளாக விண்வெளியில் செயல்பட்டு வரும் நாசாவின் ‘ஹபிள்’ தொலைநோக்கியை விட 100 மடங்குக்கும் அதிகமாகும்.
- இதன் மூலம் சூப்பர் நோவா எனப்படும் நட்சத்திர வெடிப்புகள், ஆயிரக்கணக்கான கோள்கள், கோடிக்கணக்கான விண்மீன் திரள்கள் மற்றும் பல கோடி நட்சத்திரங்களை கண்டறிய முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
- நட்சத்திரங்களின் ஒளியை மறைத்து அவற்றைச் சுற்றி வரும் மங்கலான கோள்களை நேரடியாகப் படம் பிடிக்க உதவும் பரிசோதனை கருவியும் இதில் இடம்பெற்றுள்ளது.
- மேலும், பிரபஞ்சத்தின் மொத்த உள்ளடக்கத்தில் 90 சதவீதத்திற்கு மேல் இருக்கும் இருள் பொருள் மற்றும் இருள் ஆற்றல் ஆகியவை குறித்தும் ரோமன் தொலைநோக்கி மூலம் பதில் தேட முடியும்.
- இருள் பொருள் என்பது ஒளியை வெளியிடவோ, பிரதிபலிக்கவோ, உறிஞ்சவோ செய்ய முடியாததாக கருதப்படும் ஒரு வகை பொருள். அதனால் நேரடியாக தொலைநோக்கியில் பார்க்க முடியாது.
- ஆனால் அதன் ஈர்ப்பு விசையை கணிக்க முடிகிறது. இருள் சக்தி என்பது பிரபஞ்சத்தின் விரிவாக்கம் வேகமடைவதற்கு காரணமாக கருதப்படுகிறது.
- இந்நிலையில், ரோமன் தொலைநோக்கி நேற்று அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ‘பால்கன் ஹெவி’ ராக்கெட் மூலம் ஏவப்பட்டது.

SURESH'